நாள்: 23.06.2025

O.S. No. 16/2023

வா.சா.2

பெயர்: புவனேஷ்வரி, க/பெ. கனகவேல்

1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

சா.சா.ஆ.1, 2, 3 ஆவணங்கள் ஏற்பட்ட காலத்தில் நான் திருவாரூர் சார்பதிவகத்தில் பணியில் இல்லை என்றால் சரிதான். மேற்படி சா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களின் உண்மை தன்மை குறித்து எனக்கு எதுவும் நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். சா.சா.ஆ.4-ல் வாதி திருவாரூர் மாவட்ட பதிவாளர் அவர்களுக்கு அளித்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.06.23 17:32:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ம் நாள் திங்கள்கிழமை**

**O.S.16/2023**

வாதி தரப்பு சாட்சியாகிய PW3-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்து | தாலுக்கா | : | திருவாரூர் |
| த/பெ | : | நாகரெத்தினம் | கிராமம் | : | புதுப்பத்தூர் |
| ஜாதி | : | | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர் (புதுப்பத்தூர்) |
| சமயம் | : | | வயது | : | 38/25 |

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்கிறேன். என்னிடம் காட்டப்படும் 1431, 1432 ஆகிய பசலிக்கான சிட்டா கணக்கு அப்போதைய புதுப்பத்தூர் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டதாகும். (மேற்படி ஆவணம் நகலாக உள்ள காரணத்தினால் குறியீடு செய்யப்படவில்லை) தாவா சொத்துக்களுக்கான சிட்டா கணக்குகளை கொண்டு வந்துள்ளேன். அதன் **சான்றிட்ட நகல்கள் (எண்ணிக்கை-3) சா.சா.ஆ. 5 ஆக** குறியீடு செய்யப்டுகிறது. தாவா சொத்துளான புதுப்பத்தூர் கிராமம் புல எண்.167/1 ஏ, 167/2 ஏ, 167/3 ஏ, 166/2 ஏ, 166/3 ஏ ஆகியவற்றிற்கு 1434 அடங்கல் கணக்கு கொண்டு வந்துள்ளேன். மேற்படி அடங்கல் பதிவுகளில் **சான்றிட்ட நகல் சா.சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

மேற்படி 1434 பசலிக்கான ஆங்கில காலண்டர் ஆண்டு 01.7.2024 முதல் 30.06.2025 என்றால் சரிதான். சா.சா.ஆ.5 அடங்கல் கணக்கில் புல எண்.167/3 ஏ, 166/2 ஏ, 166/3 ஏ ஆகிய சொத்துகளுக்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் புல எண்.167/3 ஏ-க்கு பட்டாதாரர் பெயர் பழனி மற்றும் 2 நபர்கள் எனவும், புல எண்.166/2 ஏ-க்கு பட்டாதாரர் பெயர் பழனி மற்றும் 1 நபர் எனவும், புல எண்.166/3 ஏ-க்கு பட்டாதாரர் பெயர் பழனி மற்றும் ஒரு நபர் எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலங்கள் பூராவும் நெல் சாகுபடி நிலங்கள் என்றால் சரிதான். மேற்படி அடங்கல் கணக்கில் கூட்டு பட்டாதாரருக்குள்ள அவரவர் தனி விஸ்தீரணம் குறித்து விவரம் காணமுடியாது என்றால் சரிதான்.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது சா.**சா.ஆ.5 மற்றும் சா.சா.ஆ.6** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.06.23 17:33:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**<u>2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ம் நாள் திங்கள்கிழமை</u>**

<u>O.S.16/2023</u>

வாதி தரப்பு சாட்சியாகிய PW4-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமச்சந்திரன் | தாலுக்கா | : | திருவாரூர் |
| த/பெ | : | கோவிந்தராஜ் | கிராமம் | : | புலிவலம் |
| ஜாதி | : | | தொழில் | : | திருவாரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளர் |
| சமயம் | : | | வயது | : | 32/25 |

**<u>முதல் விசாரணை</u>**

நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையானது திருவாரூர் வட்டாட்சியர் அவர்களுக்கு சார்வு செய்யப்பட்டுள்ளது. வட்டாட்சியர் சார்பாக சாட்சியம் அளிக்க எனக்கு உத்தரவு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் கோரப்பட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். 1ம் பிரதிவாதி பழனிவேல் பெயரிலுள்ள பட்டாவை ரத்து செய்ய கோரி பெறப்பட்ட மனுவின் பேரில் திருவாரூர் வட்டாட்சியர் அவர்கள் திருவாரூர் வருவாய் கோட்ட அலுவலருக்கு அனுப்பிய கடந்த 02.01.2023ம் தேதிய ந.க.3294/2021/ஆ 2 **அறிக்கையின் உண்மை நகல் சா.சா.ஆ.7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சா.சா.ஆ.7 ஐ அனுசரித்து திருவாரூர் வருவாய் கோட்ட அலுவலர் அவர்களால் இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் கடந்த 13.03.2023 தேதிய திருவாரூர் வருவாய் கோட்ட அலுவலரின் செயல்முறை மூலம் பிறப்பிக்கப்பட்ட இறுதி உத்தரவு என்றால் சரிதான். ( 1ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட கடந்த 13.03.2023 ம் தேதிய திருவாரூர் வருவாய் கோட்ட அலுவலரின் **செயல்முறை உத்தரவு ப.மு.6184/2022/அ 4 உத்தரவு அசல் பி.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) மேற்படி பி.சா.ஆ.3 ல் உபய தரப்பினர்களை நீதிமன்றம் மூலம் தீர்வு காண அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **சா.சா.ஆ.7 மற்றும் பி.சா.ஆ.3** ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.06.23 17:33:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்.